சின சஞ்சிகைகளையும்,
ஏனையசின வெளியீடுகளையும்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
வசந்தம்
புத்தக நிலையம்
374 A, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ-1/=

சின
சஞ்சிகைகளுக்கு
1986ஆம் ஆண்டுக்கான
சந்தாக்கள்
15-2-86 வரையும்
ஏற்றுக்கொள்ளப்படும்.
வசந்தம்
புத்தக நிலையம்
374 A, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஞூ மார்கழி மீ 05 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஆகிர் பிறை 07 (20-12-1985) UTHAYAN —A LIVELY TAMIL DAILY கதிர்:- 24

தென்னிலங்கைக்கு அனுப்பினல்

# சுவிஸ் தமிழர்கள் பணயக் கைதிகளாக மாறும் அபாயம்!

## இங்கு வந்த குழுவிடம் எடுத்துச்சொல்லப்பட்டது

முச்சந்திமுரளி



தடி தூக்கத் தெரியாத நோஞ்சலன்களிட்டையெல்லாம் துவக்குக் கொடுத்தா அந்தப் பிரகிருதிகள் என்ன செய்யும்? மற்றவையளையும் சுட்டுத் தங்களையும் சுட்டுச் சாகுங்கள்!

யாழ்ப்பாணம், டிச. 20

சுவிட்சர்லாந்தில் தஞ்சம் அடைந்த இலங்கைத் தமிழர்களை திருப்பி அனுப்பினல் அவர்கள் தென் இலங்கையில் பணயக் கைதிகளாகத்தான் வைக்கப்படுவார்கள்.

இலங்கை ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, இன்டியா ருடே' பத்திரிகைக்கு அளித்த பேட்டி இதை நிரூபிப்பதாக அமைந்துள்ளது.

யாழ். பிரஜைகள் குழு, அன்னையர் முன்னணி, தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய தூதுக் குழு ஒன்று, சுவிஸ் அரசாங்கத் தூதுக்கோஷ்டியிடம் மேற்கண்டவாறு சுட்டிக் காட்டியது.

'இன்டியா ருடே' சஞ்
(4-ஆம் பக்கம் பார்க்க)

## அப்பா, அம்மாவுக்கு துப்பாக்கி இயக்கிக் காட்டிய ஊர்காவல் வீரரின் கழுத்தை துளைத்தது குண்டு!

### மற்றொரு வீரரின் மகளை மகன் சுட்டார்

— திருமலை மாவட்டச் செய்தியாளர் —

திருகோணமலை, டிச. 20

ஊர்காவல் படை வீரர் ஒருவரின் துப்பாக்கி அந்த வீரரையே பலி எடுத்தது.

இன்னொரு ஊர்காவல் படை வீரரின் துப்பாக்கி அவரின் ஆறு வயது மகளைப் பலி எடுத்தது.

திருகோணமலை, முதலிக்குளம் பகுதியில் இச்சம்பவங்கள் இடம்பெற்றன.

விவரம் வருமாறு;

முதல் சம்பவம்

கே.பி. ரட்ணயக, வயது 18. முதலிக்குளம் ஊர்காவல்படை வீரர்.

சம்பவ தினம் மாலை வீட்டில் வாங்கு ஒன்றில் தாய், தந்தையருடன் அமர்ந்து பேசிக்கொண்டு இருந்தார். கூட இன்னொரு ஊர்காவல் படை வீரரும் இருந்தார்.

'அம்மா, இப்படித்தான் துவக்கைக் கழுத்தில் வைத்துச் சுடுவது' - என்று சொல்லி துப்பாக்
(4 ஆம் பக்கம் பார்க்க)

### அபராதம்

திருகோணமலை, டிச. 20

1,000 களஞ்சி ஹெரோயின் வைத்து இருந்த குற்றத்தை ஒப்புக் கொண்ட அருணுசலம் என்ற நபருக்கு 2,250 அபராதம் திருமலை நீதவானுல் விதிக்கப்பட்டது.

### சுபநேரம்

20 - 12 - 1985

வெள்ளிக்கிழமை

சுபநேரம்:
6-24 முதல் 7-54 வரை
ராகுகாலம்:
10-54முதல் 12-24வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
நவமி ப, இரவு 2-00மணி

### பொலிகண்டியில் கண்ணி வெடிகள்

யாழ்ப்பாணம், டிச. 20

கவச வண்டிகளுடன் கால்நடையாக காங்கேசன்துறையில் இருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த ஆயுதப்படையினர், பொலிகண்டிக்கு அண்மையில் 3 நிலக்கண்ணிகளைக் கண்டு எடுத்தனர்.

இதனுல் அப்பகுதியில் பதற்றம் நிலவியது.

வீடுகள் சோதனையிடப்பட்டன.

# இனப்பிரச்சினை: யு. என். பியிடம் ஆணைகேட்பார் ஜே. ஆர்.

கொழும்பு, டிச. 20

நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தமக்கு புதிதாக ஆணை தருமாறு, ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கேட்கவிருக்கிறர்.

ஆளுங் கட்சியான யூ. என். பியிடமிருந்து அவர் ஆணை கேட்கவுள்ளார்.

இனப் பிரச்சினையைத் தாம் என்ன விதத்தில் தீர்க்கப் போகிறர் என்ற விஞ்ஞாபனத்தை அவர் கட்சியின் 12,000 பிரதிநிதிகளிடம் தெரிவிப்பார்.

அதனை அமுல் செய்வதற்கு தமக்கு ஆணை தருமாறு அவர் பிரதிநிதிகளைக் கேட்பார்.

யு. என். பியின் வருடாந்த மாநாடு நாளை சனிக்கிழமை நடைபெறுகிறது. அப்போதே ஜனதிபதி, இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தனது விஞ்ஞாபனத்தை-திட்டத்தை வெளியிட்டுப் புதிதாக ஆணை கேட்க இருக்கிறர்.

சுகததாச உள்ளரங்கில் நடக்க இருக்கும் இந்த வருடாந்த மாநாட்டில் நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் 12,000 பிரதிநிதிகள் கலந்து கொள்கிறர்கள். மாநாட்டுக்கு கட்சியின் அவைத் தலைவர் திரு. ஹாமீஷா அபேயவர்த்தன தலைமை வகிப்பார். ஜனதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையுரை நிகழ்த்துவார்.

முக்கிய பிரேரணைகளும் இந்த மாநாட்டில் நிறைவேற்றப்படும்.

# எம். ஜி. ஆர்., கூட்டணியினர் போராளிகளுடன் தொண்டா முக்கிய சந்திப்பு

## இன்று தமிழகம் பயணம்

யாழ்ப்பாணம், டிச. 20

இன்று தமிழ் நாடு பயணமாகும் கிராமக் கைத்தொழில் அபிவிருத்தித் துறை அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் தமிழ் நாடு முதலமைச்சர் எம். ஜி. ஆர்., கூட்டணியினர், போராளிகள் ஆகியோருடன் முக்கிய பேச்சு நடத்துவார்.

மூன்றுவாரம் திரு. எஸ். தொண்டமான் தமிழகத்தில் தங்கியிருப்பார்.

அங்கு தங்கி இருக்கும் போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்று யோசனைகள் குறித்து கூட்டணித் தலைவர்கள், போராளிகள், முதலமைச்சர், அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் ஆகியோருடன் திரு எஸ். தொண்டமான் பேச்சு வார்த்தைகள் நடத்துவார்.

அவசியம் ஏற்படின் இந்திய வெளிநாட்டு அமைச்சுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரி, பிரதமர் ராஜீவ் காந்தி ஆகியோரையும் சந்தித்துப் பேசுவார் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

கடந்த புதன்கிழமை ஜனதிபதியை, அமைச்
(4-ஆம் பக்கம் பார்க்க)

வித்தாரம்

4-ஆம் பக்கத்தில்

காத்தான்குடியில் கொள்ளை முயற்சி

## ஒருவர் சயினயிட் அருந்தி மரணம்: இருவர் தப்பினர்

### இறந்தவரின் சடலமும் கடத்தல்

— நமது மட்டக்களப்புச் செய்தியாளர் —

மட்டக்களப்பு, டிச. 20

காத்தான்குடி தபால் நிலையத்தில் நேற்றுப் பகல் நடந்த கொள்ளைச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட ஒருவர் சயினயிட் அருந்தி இறந்தார்.

இரண்டு நபர்கள் தப்பி ஓடிவிட்டனர்.

இதுபற்றி கூறப்படுவதாவது:

நேற்றுப் பகல் 11-30 மணியளவில் ஆயுதம் தாங்கிய மூன்று இளைஞர்கள் காத்தான் குடி தபால் நிலையத்துக்குள் நுழைந்து ஊழியரை மிரட்டினர்.

பின்னர் மணியாடர், முத்திரைக் கவுண்டர்களில் இருந்த 739 ரூபா 47சதத்தைக் கொள்ளையடித்துக்கொண்டு செல்ல முயற்சித்த சமயம், மோட்டார் சைக்கிள் 'ஸ்டார்ட்' ஆக மறுத்துவிட்டது.

துப்பாக்கிப் பிரயோகம் செய்தவண்ணம் மூவரும் ஓடத் தொடங்கினர்.

கட்டை காற்சட்டை அணிந்திருந்த இவர்கள் கடற்கரையால் ஓடிக் கொண்டிருந்த சமயம் ஊர் மக்களால் ஒருவர் பிடிபட்டார். அவர் உடனே சயினயிட் அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

மற்ற இரண்டு பேரும் எதிரே வந்துகொண்டு இருந்த மோட்டார் சைக்கிளை மறித்து, அதன் திறப்பைக் கேட்டனர்.

உரிமையாளர் மறுக்கவே, அவரின் கால்களில் சுட்டுவிட்டு, மோட்டார் சைக்கிளில் ஏறித் தப்பிச் சென்றுவிட்டனர்.

மோட்டார் சைக்கிள் உரிமையாளரான தாஜுடீன் (வயது 18) என்பவர் காலில் ஏற்பட்ட காயங்களுடன் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

இறந்த இளைஞனின் சடலத்தை, ஊர் மக்கள் ஆயுதப் படையினரிடம் ஒப்படைத்தனர். படையினர் பின்னர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரி பிரேத அறையில் சடலத்தை ஒப்படைத்தனர்.

நேற்றுப் பிற்பகல் 3-30 மணி அளவில் பிரேத அறை பின்பக்கமாக உடைக்கப்பட்டு இளைஞனின் சடலம் இனந்தெரியாத நபர்களினல் கடத்திச் செல்லப்பட்டது.

## முல்லைத்தீவில் 6 போராளிகள் மரணம்

யாழ்ப்பாணம், டிச. 20

முல்லைத்தீவுப் பகுதியில் நடந்த அசம்பாவிதமொன்றில் ஒரு இயக்கத்தைச் சேர்ந்த 6 போராளிகள் இறந்தனர் என்று அஞ்சப்படுகிறது.

இதனுல் அப்பகுதியில் பஸ் சேவைகள் நிறுத்தப்பட்டன. அடிக்கடி குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன.

முல்லைத்தீவுப் பட்டினத்தில் இருந்து 3 மைல் தூரத்தில் இச்சம்பவம் நடந்தது.

# இன்டர்சிற்றி சேவை இன்று முதல் மீண்டும்

## யாழ்ப்பாணம் வரை மட்டுமே

யாழ்ப்பாணம், டிச. 20

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையேயான 'இன்டர்சிற்றி' ரயில் சேவை இன்று (வெள்ளி) தொடக்கம் மீண்டும் ஆரம்பமாகிறது.

பாதுகாப்பு அமைச்சில் நடந்த உயர்மட்ட ஆலோசனை ஒன்றைத் தொடர்ந்து 'இன்டர்சிற்றி' ரயில் சேவையை மீண்டும் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து காலை 5-45 மணிக்குப் புறப்படும் 'இன்டர்சிற்றி' நண்பகல் 11-55மணிக்கு யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை வந்தடையும். பின்னர் நண்பகல் ஒரு மணிக்கு யாழ்ப்பாணம் ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்டு கொழும்புக் கோட்டையை இரவு 7-20மணிக்குச் சென்றடையும். முன்னரைப் போல் காங்கேசன்துறை வரை சென்று திரும்பமாட்டாது.

ஞாயிறு, திங்கள், புதன், வெள்ளி ஆகிய நான்கு நாட்களிலும் 'இன்டர்சிற்றி' ரயில் சேவை நடக்கும்.

பிந்தியசெய்தி

### விமானங்கள்

கொழும்பு, டிச. 20

கொழும்பிலிருந்து மூன்று விமானங்கள் நேற்று மாலை அவசரமாக யாழ்ப்பாணம் விரைந்ததாக பிந்திக் கிடைத்த ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவித்தன.

### அஸ்ஸாம் மக்கள் முன்னணி பெரும் வெற்றி

புதுடில்லி, டிச. 19

அஸ்ஸாம் சட்டசபைத் தேர்தல்களில் முடிவுகள் அறிவிக்கப்பட்ட 106 தொகுதி வில் அஸ்ஸாம் கணபரிஷத் என்று அழைக்கப்படும் அஸ்ஸாம் மக்கள் முன்னணி 65 தொகுதிகளைக் கைப்பற்றியது.

சட்டசபைக்கான மொத்த தொகுதிகள் 125 ஆகும்.

★ கூட்டணியின்

## மாற்றுத் திட்டத்தை ஏற்குமாறு இலங்கையை இந்தியா வற்புறுத்தும்

புதுடில்லி, டிச. 19

தமிழர் விடுதலைக் கூட்டணி சமர்ப்பித்துள்ள மாற்று யோசனைகளில் (திட்டத்தில்) காணப்படும் முக்கிய அம்சங்களை ஏற்கவேண்டும் என்று இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியா வலியுறுத்திக் கூற உள்ளது.

இதற்காக இந்திய வெளிநாட்டு அமைச்சுச் செயலாளர் ரொமேஷ் பண்டாரி மீண்டும் ஒரு முறை இலங்கை வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கான 'சரியான சந்தர்ப்பம்' ஒன்றை திரு. பண்டாரி எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாகவும் புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

அந்தச் 'சரியான சந்தர்ப்பத்தை' அளிக்காமல் தவிர்க்கும் ஒரு நடவடிக்கையாகவே இலங்கை அரசு, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களை இலங்கைக்கு வந்து பேச்சுக்களை நடத்தும்படி அழைப்பு விடுத்
(4 ஆம் பக்கம் பார்க்க)

### காவலுக்கு நின்ற பொலிஸை நோக்கி கிரெனேட் வீச்சு

யாழ்ப்பாணம், டிச. 20

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் காவலுக்கு இருந்த பொலிஸாரை நோக்கி கிரெனேட் வீசப்பட்டது. ஏற்கனவே கண்ணி வெடியால் சேதம் அடைந்து அங்கு நிறுத்தப்பட்டிருந்த ஜீப் ஒன்றின் மீது கிரெனேட் விழுந்து வெடித்தது.

நேற்று இரவு 10 மணிக்கு நடந்த இச்சம்பவத்தில் பொலிஸ்காரர் ஒருவர் காயம் அடைந்தார்.

சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் தொடர்ந்து கேட்டவண்ணம் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

Bata
SHOW ROOM
19, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
நத்தார்
மலிவு விற்பனை
சில தினங்களுக்கு மட்டுமே!
உங்கள் பாதங்களின் பாத அணி பாட்டா
விரைந்திடுவீர்!
அதன் வனப்பை தேர்ந்திடுவீர்!!
Bata

## புன்னகையரசி விஜயா புகழுக்கு காரணமென்ன?

புன்னகை அரசி கே. ஆர். விஜயாவின் நிலையான புகழுக்குக் காரணம், நடிப்பின் மீது அவர் வைத்திருக்கும் பற்றுதான். திரையுலகுக்கு எத்தனைபேர் வந்தாலும் கே. ஆர். விஜயா இன்றும் திரையில் மின்னுவதற்கு இதுவே காரணம்.

இன்றும் அவரது 'இமேஜ்' குறையாமல் இருப்பதன் காரணத்தை அவரே கூறுகின்றார்:-

''ஒரு நடிகை என்றால் எந்தவிதமான பாத்திரத்தையும் ஏற்றுச் செய்ய வேண்டும். அதைவிடுத்து, குறிப்பிட்ட சில பாத்திரங்களைத்தான் செய்வேன் என்ற பிடிவாதம் இருக்கக் கூடாது.

என் மனதுக்கு மகிழ்ச்சி தரும் நல்ல கதாபாத்திரங்களில் நடிக்க தயங்கியதே கிடையாது.

அண்மையில் வெளிவந்த ''அவள் சுமங்கலிதான்'' படத்தில் என்னுடைய கரெக்டர் மிகவும் பிடித்திருந்தது.

அதேபோல் ''ஸ்ரீ ராகவேந்திரர்'' படத்தில் மீண்டும் கல்யாணியாக வேடம் கிடைத்தது என் மனதுக்கு நிறைவைத் தரும் விஷயங்களில் ஒன்று.

இத்தனை வருடங்களாக தொடர்ந்து நடித்துக் கொண்டிருந்தாலும் நடிப்பதில் எனக்கு சலிப்போ, களைப்போ ஏற்படவில்லை. இனியும் தொடர்ந்து நடித்துக் கொண்டேதான் இருப்பேன்'' என்றார்.

### ராதிகாவும் பம்பாயை கலக்குவாரா?

தென்னிந்திய நடிகைகள் ஹிந்திப் படவுலகை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் காலம் இது. அதிலும் ஸ்ரீதேவி ஹிந்திப் படவுலகின் ''நம்பர் வண்'' நடிகையாக ஜொலித்துக் கொண்டிருக்கிறார்.

இப்பொழுது ராதிகாவும் ஹிந்திப் படவுலகில் புகுந்திருக்கிறார். தெலுங்குப் படவுலகையே ஒரு கலக்குக் கலக்கியவர் ராதிகா.

ஹிந்திப் படவுலகையும் கலக்குவாரா அல்லது கலங்கிப் போய் ஓடி வந்து விடுவாரா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

தினசரி சினிமா

# பரஸ்பரம் அணுசக்தி நிலையங்களைத் தாக்குவது இல்லை:

# இந்திய - பாக். உடன்பாட்டுக்கு அமெரிக்கா வரவேற்பு

## பிராந்திய அமைதிக்கு வழிவகுக்கும் என்கிறது

வாஷிங்டன், டிச. 19

பரஸ்பரம் தமது அணுசக்தி நிலையங்களைத் தாக்குவது இல்லை என்ற இந்திய பாகிஸ்தான் உடன்படிக்கையை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

தெற்காசிய பிராந்தியத்தில் அமைதியும் உறுதிப்பாடும் நிலவ இந்த உடன்படிக்கை வழி செய்யும் என்று அமெரிக்கா நம்பிக்கை தெரிவித்துள்ளது.

பரஸ்பர நம்பிக்கை இரண்டு நாடுகளுக்கு இடையேயும் வளர்வதில் தான் தெற்காசிய பிராந்தியத்தில் அமைதி நிலவ முடியும் என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

உருவாகியுள்ள அந்த பரஸ்பர நம்பிக்கை பேணி வளர்க்கப்பட வேண்டும் என்றும் அமெரிக்கா இரண்டு நாடுகளையும் கேட்டுள்ளது.

அமெரிக்கா வெளிநாட்டமைச்சு விடுத்த அறிக்கை ஒன்றில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு ஆறு மணித்தியால விஜயம் ஒன்றை மேற்கொண்டு பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா சென்றிருந்த சமயத்தில்தான் இந்த உடன்பாடு காணப்பட்டது.

பரஸ்பரம் அணுசக்தி நிலையங்களைத் தாக்குவது இல்லை என்று நாம் இருவரும் உடன்பாடு ஒன்றுக்கு வந்துள்ளோம் — இப்படி பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா, பேச்சுவார்த்தை முடிவில் செய்தியாளர் மத்தியில் தெரிவித்தார்.

இதனிடையில் அடுத்த ஆண்டு இரண்டு நாட்டு வெளிநாட்டமைச்சுச் செயலாளர்களும் கூடி, பாகிஸ்தானின் அனாக்கிரமிப்பு ஒப்பந்த யோசனையையும் இந்தியாவின் சமாதான, நல்லெண்ண ஒப்பந்த யோசனையையும் இணைத்து உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்வது பற்றி ஆராய இருக்கின்றனர்.

### தொலைபேசி பழுதா? கட்டணத்தில் கழிவு

30 தினங்களுக்கு மேல் தொலைபேசி பழுதடைந்து பாவிக்க முடியாது இருந்தால் அந்தக் காலத்துக்கு, வருடாந்த வாடகையில் ஒரு கழிவு வழங்கப்படும்.

இப்படி தொலை தொடர்புத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இந்த நடைமுறை இலங்கையில் என்று நினைத்துச் சந்தோஷப்படாதீர்கள்.

இந்தத் திட்டம் டிசம்பரில் இருந்து இந்தியாவில் அமுலுக்கு வந்துள்ளது.

இலங்கை இப்படி ஒரு திட்டத்தை நினைத்துப் பார்க்கும் என்று எமக்கு நம்பிக்கையில்லை?

## டெலிவிஷனில் இருந்து உத்தரவு வர நாலவரைக் கொன்றார்

கலிபோர்னியா, டிச 19

டெலிவிஷனில் இருந்து ஒரு குரல் கொல்லும்படி கட்டளை இட்டது ஆகவே தான் பெற்றோர்கள், சகோதரி, 4 வயது மருமகன் ஆகியோரைக் கொலை செய்தேன்.

இப்படி 37 வயதான மக்நமரா அமெரிக்க நீதிமன்றம் ஒன்றில் கூறினான்.

அப்பா, அம்மா, தங்கை 4 வயது மருமகன் ஆகியோரைக் கொன்ற குற்றத்தையும் அவன் ஒப்புக் கொண்டான்.

தான் பிரிட்டிஷ் மகாராணி எலிஸபெத்தின் சட்டபூர்வமற்ற மகன் என்றும் மக்நமரா நீதிமன்றத்தில் சொன்னான்.

தந்தை, சகோதரி, மருமகன் ஆகியோரைச் சுட்டுக் கொலை செய்த இவன் தாயை அவள் முகத்தில் கல்லால் அடித்துக் கொலை செய்தான்.

''இவர்களைக் கொல்லவும் இல்லாவிடில் அது உனக்கு தீங்கு செய்யும்'' இப்படி டெலிவிஷனில் இருந்து ஒரு குரல் எச்சரிக்கை செய்தது என்றும் கொலைகாரன் கூறினான்.

அடுத்தவாரம் அவனுக்குத் தண்டனை விதிக்கப்பட உள்ளது. அதற்கிடையில் அவன் மனோநிலை சம்பந்தமாக மனோதத்துவ நிபுணர் ஒருவரின் அறிக்கையை நீதிபதி கேட்டுள்ளார்.

## வெளி உலகில்

# ஆக்கிரமிப்பு கொள்கையை கைவிடாதவரை இஸ்ரவேலுடன் உறவு இல்லை

## நவசீனா அறிவிப்பு

அம்மான், டிச. 19

தற்போதைய ஆக்கிரமிப்பு கொள்கையைக் கைவிடும்வரை, இஸ்ரவேலுடன் சீனா ராஜதந்திர தொடர்பு எதையும் வைக்காது.

சீன வெளிநாட்டமைச்சர் வூ ஷீகியான் ஜோர்தான் தலைநகரான அம்மானில் வைத்து இதை வெளியிட்டார்.

சீனாவுக்கும் இஸ்ரவேலுக்கும் இடையே ராஜதந்திர தொடர்புகள் ஏற்படவுள்ளன என்ற பத்திரிகைச் செய்திகள் ஆதாரமற்றவை என்றும் வெளிநாட்டமைச்சர் சொன்னார்.

இஸ்ரவேலுடன் சீனாவுக்கு அரசியல், பொருளாதார, இராணுவ, தொழில் நுட்பத் தொடர்புகள் எதுவும் கிடையாது என்றும் சீன அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜோர்தான் நாட்டு செய்தியாளர்கள் மட்டுமே கலந்து கொண்ட மாநாட்டில் வைத்து சீன அமைச்சர் இக்கருத்துக்களை வெளியிட்டார்.

## ருமேனியாவில் ஜோர்ஜ் சூல்ட்ஸ்

புக்காரெஸ்ட், டிச 19

கிழக்கு ஐரோப்பிய சுற்றுப்பயணத்தின் இறுதிக்கட்டமாக அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் ஜோர்ஜ் சூல்ட்ஸ், ருமேனியாவுக்கு விஜயம் செய்தார்.

ருமேனியா, ஒரு கம்யூனிஸ்ட் நாடு. ஆனால் ரஷ்யாவின் கட்டுப்பாட்டுக்குள் அது இல்லை.

ருமேனியத் தலைவரும் அமெரிக்க வெளிநாட்டு அமைச்சரும் பேச்சுவார்த்தை நடத்தினர். மனித உரிமைகளை மதிப்பது சம்பந்தமாகவே இரண்டு தலைவர்களும் பேச்சுக்கள் நடத்தியதாக ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

ருமேனியாவில் அடிப்படை மனித உரிமைகள் நிலவுவது பற்றியும் ஆராயப்பட்டது.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ரஷ்யாவின் ஆதிக்கம் இடம்பெறுவதை அனுமதிக்க முடியாது என்று அமெரிக்க அமைச்சர் ஏற்கனவே அறிவித்து இருந்தார் என்பது தெரிந்ததே.

## நத்தாரை முன்னிட்டு ஆயுதப்படை உஷார்

கொழும்பு, டிச 20

நத்தார் பண்டிகையை முன்னிட்டு நாடு முழுவதும் ஆயுதப் படையினர் உஷார் படுத்தப்பட்டுள்ளனர்.

இப்படி பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

நத்தார் காலத்தில் போராளிகள் பெரிய தாக்குதலை நடத்தலாம் என்று அஞ்சுவதால் தான் இந்த நடவடிக்கை என்று பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

## 15,000 அகதிகளை மீண்டும் திருமலைக்கு கொண்டுவர முயற்சி

கொழும்பு, டிச 20

தொடர்ந்து நடைபெறும் வன்செயல்கள் காரணமாக மட்டக்களப்பில் தஞ்சம் அடைந்துள்ள 15,000 திருமலைத் தமிழ் அகதிகளை மீண்டும் திருகோணமலைக்குக் கொண்டுவர அரச வட்டாரங்கள் முயற்சி எடுத்து வருகின்றன.

திருகோணமலை அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பொன்னுத்துரையும் இணைப்பு அதிகாரி பிரிகேடியர் ஹாஷா குணரத்னவும் வாகரைக்கு விஜயம் செய்து அங்கு முகாமிட்டுள்ள திருமலைத் தமிழ் அகதிகளைச் சந்தித்துப் பேசினர்.

## யாழ் இளைஞர் கட்டுநாயககாவில் கைது

கொழும்பு, டிச 20

மத்திய கிழக்கு நாடு ஒன்றில் வேலை செய்து விட்டு தாயகம் திரும்பிய யாழ்ப்பாணத் தமிழர், கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து இரகசிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

நடுத்தர வயதான இந்த தமிழர், இரகசியப் பொலிஸாரால் தற்சமயம் விசாரணை செய்யப்பட்டு வருகிறார்.

போராளிகளுக்கு, வெளிநாட்டில் வைத்து நிதி உதவி அளித்துள்ளாரா என்பது பற்றிய, இரகசியப் பொலிஸார் விசாரிக்கின்றனர் என்று தெரியவருகின்றது.

## வெலிக்கந்தையில் கைதான யாழ்ப்பாண இளைஞர் இப்போது எங்கே?

கொழும்பு, டிச. 20

வெலிக்கந்தையில் வைத்து ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்ட செபஸ்தியன் ஜோன் எங்கே?

யாழ்ப்பாணம் பீச் வீதியைச் சேர்ந்த செபஸ்தியன் மரியாய் தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனு செவ்வாய்க்கிழமை கொழும்பு அப்பீல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

காவலில் வைக்கப்பட்டுள்ள செபஸ்தியன் ஜோனின் தாய்தான் மனுவைத் தாக்கல் செய்து இருந்தார்.

பிரதிவாதிகளாக இராணுவ தளபதி, சிறைச்சாலை ஆணையாளர், இரகசியப் பொலீஸ் இயக்குநர், சட்டமா அதிபர் ஆகியோர் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுவை ஏற்றுக்கொண்ட அப்பீல் நீதிமன்றம், பிரதிவாதிகளை ஜனவரி 13ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவிட்டது.

## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

# யுத்தம் வந்தால் அதிலும் நாமே வெல்வோம்

## நிதி அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, டிச 20

வடக்கு, கிழக்குப் பிரச்சினைகளுக்கு சமாதானத் தீர்வே காண அரசு விரும்புகிறது.

சில சக்திகள் யுத்தம் மூலம் தீர்வுகாண முயற்சிக்கின்றன.

அப்படி யுத்தம் வந்தாலும் அதிலும் நாமே வெல்வோம்.

இப்படி நிதிஅமைச்சர் ரொனி டி மெல் அக்குரஸ்ஸ பகுதியில் தேசிய சேமிப்பு வங்கிக் கிளை ஒன்றைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது:-

இந்த நாட்டில் 1கோடி 20 லட்சம் சிங்களவர் வாழுகின்றனர். தமிழர் ஆக 25 லட்சம் பேரே உள்ளனர்.

உலகில் தமிழர் 6 கோடி பேர் உள்ளனர். அதுவும் அருகில உள்ள தமிழ் நாட்டில் 5 கோடி தமிழர் உள்ளனர்.

தமிழ் நாட்டில் தான் போராளிகளும் உள்ளனர் என்பதும் எல்லாருக்கும் தெரிந்த உண்மை.

இன்றைய இலங்கை நிலைமை மோசமானது. முழுச்சக்தியையும் பயன்படுத்தி நாம் வெற்றியீட்ட வேண்டியுள்ளது.

சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமா பண்டாரநாயக்கா நிலைமையை ஆழமாகப் பார்க்காது அறிக்கைகளை விடுக்கின்றார்.

கிழக்கில் இருந்து வந்துள்ள சிங்கள அகதிகளைப் போய்ப் பார்த்து தேங்காய், அரிசி கொடுத்து ஆறுதல் சொல்வதன் மூலம் ஆட்சியைப் பிடிக்கலாம் என்று எண்ணுகிறார் சிறிமா அம்மையார்.

1989க்கு முன்னர் நாம் தேர்தலை நடத்த மாட்டோம்.

இப்படி நிதி அமைச்சர் குறிப்பிட்டார்.

## அரசுக்கு ஆயுள் போதாது என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, டிச. 20

பிரதமரின் பத்து லட்சம் வீடமைப்புத் திட்டத்தைப் பூர்த்தி செய்ய இந்த அரசாங்கத்தின் ஆயுள் காலம் போதாது.

அதற்காக அரசாங்கம் தனது ஆட்சிக்காலத்தை நீடிக்கப் போவது இல்லை.

இப்படி ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா சொன்னார்.

செவ்வாய் மாலை கொழும்பில் இஸ்லாமிய மாநாடு ஒன்றை அங்குரார்ப்பணஞ் செய்து வைத்துப் பேசுகையிலேயே ஜனாதிபதி இக்கருத்தை வெளியிட்டார்.

இக்கருத்தை வெளியிடும் முன்னர், ''தான் சொல்லப்போகும் விஷயத்தைப் பாரதூரமாக எடுக்க வேண்டாம்'' என்று ஜனாதிபதி கூட்டத்தினரைக் கேட்டுக் கொண்டார்.

மேலும் அவர் பேசுகையில் இந்தஅரசாங்கத்தின் ஆயுள்காலம் முடிவடைவதற்கு முன்னரே பிரதமரின் பத்துலட்சம் வீடமைப்புத் திட்டம் முடிவடைந்து விடும் என்றும் அந்த அளவிற்கு வேகமாக செயல்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

## சமய சந்நிதிகளில்

### மகோற்சவம்

யாழ்ப்பாணம், டிச 20

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி மகோற்சவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கின்றது.

அபிஷேகம், சுவர்க்க வாயில் தரிசனம், தீபாராதனை, சுவாமி எழுந்தருளல் முதலியன காலை 4-00க்கும் — 6-00க்கும் இடையில் நடைபெறும்.

காலை 6.30க்கு பிரம்மஸ்ரீ இ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

இரவு 9மணிக்கு 'வாழ்வினோர் மார்கழி' என்னும் பொருள்பற்றி செல்வி. புஷ்பா செல்வநாயகம் விரிவுரை ஆற்றுவார்.

இரவு 10.30 மணிக்கு 'பைந்தமிழ் பின்சென்ற பசுங்கொண்டல்' என்னும் பொருள்பற்றி அருள்மொழி அரசிவித்துவான் திருமதி. வசந்தா வைத்தியநாதன் பேசுவார்.

★

யாழ்ப்பாணம், டிச 20

சுன்னாகம் சூராவத்தை முத்துமாரியம்மன் கோயிலில் திருவாதவூரடிகள் புராண படனம், பிரம்மஸ்ரீ ச. சண்முகானந்தக் குருக்களினால் புதன்கிழமை காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

★

நல்லூர், டிச 20

வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலயத்தில் திருவெம்பாவைப் பூஜையை முன்னிட்டு தினமும் அதிகாலை 5மணியளவில் ''திருவாதவூரடிகள் புராணம்'' படிப்பும் பயன் சொல்லலும் நடைபெறுகிறது.

## 50க்கு மேற்பட்ட சமயா சமய ஊழியருக்கு முழுமையாக நஷ்ட ஈடு இல்லை

திருநெல்வேலி, டிச 20

வேலணை பெருந்தெருக்கள் திணைக்களத் திலால் வேலை நீக்கம் செய்யப்பட்ட 50க்கு மேற்பட்ட சமயாசமய ஊழியர்களுக்கு இது வரை நஷ்ட ஈடு முழுமையாக வழங்கப்படவில்லை.

பாதிக்கப்பட்ட ஊழியர்கள் திணைக்கள அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு விசாரித்தனர்.

மீதி கொடுப்பனவு பற்றி தலைமை அலுவலகத்தில் இருந்து எதுவித அறிவித்தலும் கிடைக்கவில்லை என்று தலைமை அலுவலகம் கையை விரித்து விட்டதாகக் கூறப்படுகின்றது.

மாசி மாதம் இத்திணைக்களம் அதிகார சபையாக மாறவுள்ளது. அதற்கு இடையில் இந்த ஊழியர்களின் முழுக் கொடுப்பனவுகளையும் கொடுத்து விட வேண்டும் என்றும் பணிக்கப்பட்டிருக்கும் இத்தருணத்தில் திணைக்கள அதிகாரிகள் அக்கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொடுப்பதில் அக்கறை காட்டாது இருப்பது ஊழியர்கள் மத்தியில் வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

### சாம்பல்தீவில் டிராக்டர் பிடிபட்டது

திருகோணமலை, டிச 20

சாம்பல்தீவுக்கு அருகில் டிராக்டர் ஒன்று ஆயுதப்படையினரால் கைப்பற்றப்பட்டது.

திருமலைப் பொலீஸ் நிலையத்தில் டிராக்டர் வைக்கப்பட்டுள்ளது.

போராளிகள் டிராக்டரில் சென்றார்கள் என்றும் ஆயுதப்படையினரைக் கண்டதும் டிராக்டரைக் கைவிட்டு மறைந்துவிட்டனர் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின.

### காங்கேசனில் கப்பலில் மா

திருகோணமலை டிச 20

திருகோணமலையில் இருந்து 14,978 மூடை பிறிமா மாவை ஏற்றிக் கொண்டு கப்பல் ஒன்று காங்கேசன் துறைமுகம் வந்து சேரவுள்ளது.

கப்பலின் பெயர் 'தங்கல்ல'.

### மனனப்போட்டி

யாழ்ப்பாணம், டிச 20

திருவெம்பாவை காலத்தில் சிவபுராணம், திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை பதிகங்கள் மனனப் போட்டியை நடத்த அகில இலங்கைத் திருமுறை மன்றம் தீர்மானித்து உள்ளது.

போட்டி நிபந்தனைகள் வருமாறு:-

1. பதினெட்டுவயதுக்கு உட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் பங்கு பற்றலாம்.

2. பதிகங்களை அதற்காக அமைந்த இராகத்தில் ஓதுதல் வேண்டும்.

3. போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

4. போட்டியில் பங்குபற்றும் பொழுது ஆசாரசீலர்களாக வருதல் வேண்டும்.

போட்டி நடைபெறும் இடம், திகதி, விண்ணப்பப் பத்திரம் முதலியவற்றிற்கு அகில இலங்கைத் திருமுறை மன்றம், 3112, சங்கிலியன் வீதி, நல்லூர் என்ற விலாசத்துடன் அல்லது வகுப்புக்கள் நடைபெறும் ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் தொடர்பு கொள்ளும்படி வேண்டப் படுகின்றனர்

### உதய சங்கற்பம்

அன்பு ஒன்றே உலகின் அஸ்திவாரம், அது இல்லையேல் உலகமும் இல்லை. அன்புதான் இறை ஜோதி. அன்புதான் இன்பஊற்று, அன்புதான் உலக மகாசக்தி.

— அறிஞர் சோக்கிரட்டீஸ்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை, வின்சர் நிலைய வீதி, யாழ்ப்பாணம். 20-12-85 தொலை பேசி: 24805 22078 த.பெ. 23

## தர்மம் தலைகாக்கும்

யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியை தனியாரின் உதவியுடன் பராமரிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. ஆஸ்பத்திரி நோயாளர் நலன்புரி சங்கம் இப்படி ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறது.

அந்தத் திட்டத்தை அமுல் நடத்துமுகமாக, நலன்புரிச் சங்கம் பொதுமக்களுக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது. அந்த வேண்டுகோளின் சில முக்கிய பகுதிகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டியவை.

யாழ். ஆஸ்பத்திரி எமது மக்களுக்காகவே இயங்கி வருகிறது. பல இன்னல்களுக்கும், குறைபாடுகளுக்கும் மத்தியிலும் யாழ். பெரியாஸ்பத்திரி, பொதுமக்களுக்குத் தனது சேவையை அயராது வழங்கி வருகிறது. ஆஸ்பத்திரியின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள பொதுமக்களின் உதவி அவசியம். இப்படி அந்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வட மாகாணத்தில் உள்ள மிகப் பெரிய ஆஸ்பத்திரி. கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் ஆஸ்பத்திரிகள் இருந்தாலும் யாழ். ஆஸ்பத்திரியே அந்த மாவட்டங்களுக்கான பிரதம ஆஸ்பத்திரியாகத் திகழ்கிறது. அதாவது வடமாகாணம் முழுவதற்கும் தலை ஆஸ்பத்திரியாக விளங்குவது அது தான்.

பல லட்சம் மக்களின் உடல்நோய் தீர்க்கும் நிலையமாக விளங்கும் அந்த ஆஸ்பத்திரியின் நிலைமை இப்போது சீரழிந்த நிலையில் உள்ளது. அங்கு நிலவும் பற்றுக்குறைகளைச் சுட்டிக் காட்டி ஏற்கனவே இப்பத்தியில் கருத்து வெளியிட்டிருந்தோம்.

அரசாங்க நிர்வாக இயந்திரம் யாழ். ஆஸ்பத்திரியைப் புறக்கணித்து வருவது குறித்து அப்போது விரிவாக ஆராய்ந்திருந்தோம்.

தமிழ் மக்களில் பெரும் எண்ணிக்கையினர் சிகிச்சை பெறும் நிலையமாக விளங்கும் அதனை, அரசாங்கம் புறக்கணிக்கிறது என்று கூறி நாம் வாளாதிருக்க முடியாது.

யாழ். ஆஸ்பத்திரியின் வசதிகளைப் பெருக்கவும், குறைபாடுகளை நிவர்த்தி செய்யவும் மக்களாகிய நாமே செயலில் இறங்கவேண்டிய காலம் வந்துவிட்டது.

கடல் வற்றும் வற்றும் என்று காத்திருந்த கொக்கு உடல்வற்றிச் செத்ததாக ஒரு குட்டிக்கதை சொல்வார்கள். அரசாங்கம் யாழ். ஆஸ்பத்திரியின் தேவைகளை முழுக்க முழுக்கச் செய்துதரும் என்று இனியும் நம்பி இருப்பது விவேகமல்ல.

நம் கையே நமக்கு உதவி. பிறரை நம்பிப் பயனில்லை. இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக்கும் அரசாங்கம் என்று சொல்லிக்கொள்ள எந்தப் 'பிடி'யும் இருப்பதாகத் தெரியவில்லை. தமிழ் மக்களிடம் இருந்து வரி அறவிட்டபோதிலும் அவர்களுக்குரிய சேவைகளை அரசு திருப்தியுறச் செய்வதாக இல்லை.

எனவே தமிழ் மக்களாகிய நாமே எமது சொந்தத் தேவைகளை செய்யும்நிலை வந்துவிட்டது.

நோயற்ற வாழ்வுதான் குறைவற்ற செல்வம். தமிழ்மக்கள் நோயற்றவர்களாக இருந்தால்தான் உரிமைகளுக்காகப் போராட முடியும். ஆதலால் வடக்கின் தலை ஆஸ்பத்திரியான யாழ். ஆஸ்பத்திரிக்கு சகல வசதிகளையும் தேடிக் கொள்வது மக்களின் பொறுப்பு.

வசதி குறைந்த ஏழைகளுக்கு தர்ம ஆஸ்பத்திரிதான் தஞ்சம். அவர்களும் சிகிச்சை வசதிபெற்று நல்வாழ்வு வாழவேண்டும். அதற்கான தேவைகளை வசதி படைத்த தமிழ்மக்கள் பெற்றுக் கொடுப்பது அவர்களின் தலையாய கடமை.

எனவே தனியாரைக்கொண்டு யாழ். பெரியாஸ்பத்திரியைப் பராமரிக்கும் திட்டத்திற்கு பணவசதி படைத்த தமிழ்ப் பெருமக்களும், வடக்கிலுள்ள தனியார் நிறுவனங்களும் ஆதரவுக் கரம் நீட்டவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

மற்றவர்களின் துன்ப, துயரத்தைத் தீர்க்க உதவுபவன்தான் உத்தம மனிதன். அறம் காப்பதும், தர்மம் புரிவதும் தமிழர் பரம்பரைக்குப் புதியவை அல்ல.

சிறுதுளி பெருவெள்ளம். ஆகவே வசதி உள்ளவர்கள் தம்மால் இயன்ற உதவியைச் செய்தால் அதனால் ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்காக்கும் தர்மத்தைச் செய்தவர்களாவர். தர்மம் தலைகாக்கும்.

# மொறிஷியஸ் தலைவர் ராம் குலாம் மறைவு

## ஈழத் தமிழருக்கு பேரிழப்பு

### பொன். பூலோகசிங்கம்

தொடர்ச்சியாகப் பல்லாண்டுகள் மொறிஷியஸ் நாட்டின் பிரதமராகப் பதவி வகித்தவரும் அந்நாட்டுக்குச் சுதந்திரம் பெற்றுத்தந்தவருமான மொறிஷியஸ் நாட்டின் மகாதேசாதிபதி திரு. ராம் குலாமின் மரணம் உலகத்தமிழ் மக்களுக்கும் சிறப்பாக ஈழத் தமிழ் மக்களுக்குப் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மனித அடிப்படை ஜனநாயகஉரிமைகளுக்கு ஆற்றிய சேவைகளுக்காக ஐ நா. சபையினால் அவர் கௌரவிக்கப்பட்டார்.

ஐக்கிய நாடுகள் சபையின மனித உரிமைகள் காரணத்தின் அடிப்படையில தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் ஏதுக்கள் இரண்டு. அவை சமூக பொருளாதார பண்பாட்டு உரிமைகள், குடியியல் அரசியல் உரிமைகள்.

இவற்றின் அடிப்படையில் சர்வதேசநாடுகளின் கவனத்தையும் கரிசனையையும் தமிழ்த் தேசிய இனத்திற்கு ஆதாயப்படுத்திக் கொள்ள எடுக்கப்படும் முயற்சிகளுக்கு திரு. ராம் குலாமின் மரணம் பெரும் இழப்பாகவே கருதப்படும்.

திரு. ராம் குலாமை மகாதேசாதிபதியாகக் கொண்ட மொறிஷியஸ் நாடு தான் அதன் பிரதமர் திரு. ஜெகந்நாத் ஊடாக இலங்கைத் தமிழர் பிரச்சினையை ஐ நா. சபையில் முதன் முதலாக எழுப்பியது.

1984 ஆம் ஆண்டின் ஐ.நா. பொதுச்சபையின் கூட்டத்தொடரின் போது தான் மனிதாபிமான அடிப்படையில் மொறிஷியஸ் பிரதமர் ஜெகந்நாத் ஐ நா. சபையில் இலங்கைத் தமிழருக்காகக் குரல்கொடுத்தார்.

திரு. ராம் குலாம் மகா தேசாதிபதியாக இருந்த காலத்தில்-1984ம்ஆண்டு இந்தியாவுக்கு வருகை தந்திருந்த மொறிஷியஸ் நாட்டின் துணைப்பிரதமரைச் சென்னை தமிழ்த் தகவல் நிலையப் பிரமுகர்கள் புதுடில்லியில் சந்தித்தனர்.

அப்போது இலங்கைத் தமிழர்களுக்கு மொறிஷியஸ் அரசு ஆதரவு நல்குமென்று அவர்வாக்குறுதி கொடுத்திருந்தார்.

இந்த வாக்குறுதி வழங்கப்பட்ட ஒரு சில நாட்களுக்குள்ளாகவே மொறிஷியஸ் பிரதமர் ஐ. நா. பொதுச்சபையில் தமிழர் சார்பில் குரல் கொடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தைப் பொறுத்தவரை அதன் இரண்டாவது மாநாடு மொறிஷியஸ் நாட்டில் நடைபெற்றபோது திரு. ராம் குலாம் அவர்களே அம்மாநாட்டை திறந்து வைத்து ஆரம்ப நாள் உரையை ஆற்றினர்.

இரண்டாவது மாநாடு திரு ராம்குலாமின் வேண்டுகோளின்படியே அங்கு நடத்தப்பட்டது. முதலாவதுமாநாடு நடைபெற்றபோது பிரதமராக விருந்த திரு ராம்குலாம் உதவிப் பிரதமரான திரு. வீரசாமி ரெங்காடு அவர்களை அழைத்து இந்த வேண்டுகோளை நேரில் விடுத்தார்.

இதைத் தொடர்ந்து திரு. வீரசாமி ரெங்காடு தலைமையில் மொறிஷியஸ் அரசினதும் மக்களதும் பரிபூரணமான ஆதரவுடன் இரண்டாவது மாநாடு வெகு சிறப்பாக நடைபெற்றது.

உலகத் தமிழ்ப் பண்பாட்டுக்கழகத்தின் மூன்றாவது மாநாடு சேலம் மாநகரில் நடைபெறும் இந்த வேளையில் திரு. ராம் குலாம் மறைந்தது பெரும் இழப்பாகும்.

மொறிஷியஸில் மீண்டும் தமிழ்ப் பண்பாடு துளிர்விட உரமாக நின்ற ஒரு உத்தமரை இழந்து உலகத்தமிழ்ப்பண்பாட்டு இயக்கம் கண்கலங்கி நிற்கின்றது.

1981 ஆம் ஆண்டு ஜூன் முதலாம் திகதி பாதுகாப்புப் படையினரால் தீக்கிரையாக்கப்பட்ட யாழ்ப்பாணபொது சன நூல் நிலையத்தை மீள்வித்து புனரமைப்பதற்காக மொறிஷியஸ் நாட்டு அரசாங்கம் அங்குள்ள தமிழ்க் கோயில்கள் கூட்டவையினூடாக ஆயிரம் அமெரிக்கடாலர்களை அனுப்பி வைத்தது.

இதற்குக் காரணமாக விருந்தவர் திரு. ராம் குலாம் அவர்களேயாவர் என்பதையும் யாழ்ப்பாண மக்கள் நன்றியோடு நினைவு கூருகிறார்கள்.



### பொய்யாமொழி

**குறள்:**

உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்.
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.

**பொருள்:**

அறிவு என்னும் கருவியினால் ஐம்பொறிகளாகிய யானைகளை அடக்கிக் காக்க வல்லவன். மேலான வீட்டிற்க விதை போன்றவன்.

## மக்கள் முகம்

### நிர்வாகிகள்

திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் வருடாந்தக் கூட்டம் அண்மையில் நிலையப் போஷகர் திரு. க. சி. கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர் திரு. க. சி. கிருஷ்ணன். தலைவர் திரு. கே. துரைசிங்கம். செயலாளர் திரு கி. நவரத்தினம். பொருளாளர் திரு. ஐ. தட்சணாமூர்த்தி. உபதலைவர் திரு. செ. சாந்தலிங்கம். உபசெயலாளர் திரு அ. றொபின்சன். பரிசோதகர் திரு. மா. ஞானசேகரம்.

ஐந்து பேர்கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

## மட்டக்களப்பு வாவி ஹெலிக்கொப்டர் விபத்து வழக்கு ஆரம்பம்

கொழும்பு, டிச 20

மட்டக்களப்பு வாவியில் 27-5-1984 இல் இலங்கை விமானப்படையின் பெல்ஜெட்ரேஞ்சர் ஹெலிக்கொப்டர் ஒன்று விபத்துக்குள்ளான சம்பவம் குறித்து விமானம் ஓட்டி மீது குற்றஞ்சாட்டப்பட்டு உள்ளது.

கவனயீனமாக ஹெலிக்கொப்டரைச் செலுத்தி விபத்துக்குள்ளாக்கியது, அதன் மூலம் ஸ்குவாட்ரன் லீடர் ஆர். பி. அத்தபத்து, விமானப்படை வீரர் எச். எம். எஸ். சந்திரசேன ஆகியோருக்கு மரணத்தை உண்டு பண்ணியது, ஹெலிக்கொப்டரைச் சேதமாக்கியது ஆகிய குற்றச்சாட்டுக்கள் விமானம் ஓட்டி சி. ஆர் குருசிங்க மீது சுமத்தப்பட்டுள்ளன.

இந்த வழக்கு மார்ஷல் நீதிமன்றத்தில் நீதிபதி மெர்வின் சமரக்கூன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

எதிரி தரப்பில் சட்டத்தரணி டெஸ்மண்ட் பெர்னாண்டோ ஆஜரானார்.

ஹெலிக்கொப்டர் விபத்துப் பற்றி பூர்வாங்க விசாரணை அறிக்கை ஒன்று தேவை என்று எதிரி தரப்புச் சட்டத்தரணி விண்ணப்பித்தார்.

இவ்விண்ணப்பம் பற்றிய தீர்ப்பு ஜனவரி 3 இல் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அத்திகதி வரை மேல் விசாரணையும் ஒத்திவைக்கப்பட்டது.

அரசதரப்பில் அரச சட்டத்தரணி துஸாரா குணசேகராவும் குரூப் கப்டன் ஜெயவர்த்தனவும் தெரிபட்டனர்.

# கிளிநொச்சி இராணுவ முகாம் விஸ்தரிப்பு வேலைகள் துரிதம்

## வீதியால் வந்தவர்களும் வேலை வாங்கப்படுகின்றனர்

கிளிநொச்சி, டிச. 20,

கிளிநொச்சி இராணுவ முகாம் விஸ்தரிப்பு வேலைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

அனுராதபுரத்திலிருந்து வந்த ஆயுதப் படையினர் கவச வாகனங்களுடன் கிளிநொச்சி இராணுவ முகாமில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

சக்தி வாய்ந்த விசேஷ தொலைத் தொடர்பு வசதிகள் பொருத்தப்பட்ட கண்ணி வெடிகளுக்குத் தாக்குப் பிடிக்கத்தக்க கவச வாகனங்களுடன் இ.போ.ச. பஸ்களிலும் லொறிகளிலும் நடைபவனியாகவும் கிளிநொச்சி கூட்டுமுகாமுக்கு இராணுவம் வந்தபோது நகரம் பதற்றம் அடைந்தது.

நகரப்பகுதி மக்கள் என்னவோ ஏதோ என்று பயந்து பாதுகாப்பான இடங்களை நாடிச்சென்றனர்.

இதேவேளை வீதியால் வந்த பலர் இராணுவத்தால் அழைத்துச் செல்லப்பட்டு முகாம் விஸ்தரிப்பு வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

அநுராதபுரத்தில் இருந்து வந்த கவச வாகனங்களையும் ஆயுதப் படையினரையும் எதிர்கொண்டு அழைத்து வருவதற்காக கிளிநொச்சி இராணுவத்தினர் நடைபவனியாக முறிகண்டிப் பகுதிக்கு சென்றிருந்தனர்.

பிரதான கண்டி வீதியூடாக செல்லாது கிராமங்களூடாகச் சென்ற இராணுவத்தினர் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தால் சில இளைஞர்கள் காயமடைந்தனர்.

வழி நெடுக சோதனைகளை அவர்கள் மேற்கொண்டனர். வாகனங்களும் மறித்துச் சோதனையிடப்பட்டன.

இந்தச் சோதனைகளின் போது இரணைமடுப் பகுதியில் கள்ள மின்சாரம் எடுத்த சிலரைக் கைது செய்ததுடன் அவர்கள் பாவித்த வயர், கம்பி, என்பவற்றையும் இராணுவத்தினர் எடுத்து வந்தனர்.

அநுராதபுரத்தில் இருந்து கிளிநொச்சி வந்து சேர்ந்த கனரக வாகனங்களிலும் ஆயுதப் படையினரிலும் சுமார் 10கனரக வாகனங்களும் 250படைவீரர்களும் கிளிநொச்சியில் நிரந்தரமாக நிறுத்தப்படலாம் என நம்பப்படுகிறது.

## திருவெம்பாவை

### கன்னியே நீ கதவைத் திற காலை வந்துவிட்டது

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்களே
பேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக்
கோதாட்டுஞ்
சிலம்பாடிச் சிவனே சிவனே என்று
ஓலமிடினும் உணராய் உணராய் காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பவாய்.

அணவ முனைப்பின் காணமாகத் திருமாலும் பிரமதேவனும் அடிமுடி காணாதபடி ஒளிருபமாக ஓங்கி நின்றான் இறைவன்.

அத்தகைய இறைவனை நம்மைப் போன்றவர்கள் அறிந்து உணர்ந்துவிட்டதாகப் பாலும்தேனும் இனிக்கச்சொட்டச்சொட்டப்பேசுவாயே! அத்தகைய பொய்யுரைகளைப் பேசும் வஞ்சகியே! வந்து உன் வாசல் கதவைத் திறப்பாயாக. உள்ளே இருப்பவளை நோக்கிக் கூறுகிறாள் கூட்டத்தில் இருக்கும் ஒருத்தி.

அந்தப் பேச்சுக்களெல்லாம் இப்போது எங்கே போய்விட்டன? பேசா மடந்தையாய் உறங்கிப் போய்க் கிடக்கிறாயே! என்பது அதன் குறிப்பு.

அடீ கள்ளீ! வஞ்சகீ! என்று ஒருதோழி மற்றொரு தோழியைக் கூப்பிடுவது சரியல்ல எனக் கருதுகிறாள் கூட்டத்தில் இருக்கும் இங்கிதம் தெரிந்த மெல்லிடையாள் இளையகன்னி ஒருத்தி.

அந்தச்சொல் உள்ளேயிருக்கும் தோழியின் காதில் விழாமல் இருக்க அவள் ஒரு யுக்தி செய்கிறாள். உடனே சிவனே! சிவனே!! என்று ஓலமிடுகின்றாள். அதாவது சத்தம் இடுகின்றாள்.

நில உலகத்தார், விண் உலகத்தார், பிறஉலகத்தார் என எவரும் அறியமுடியாத சிவனின் திருக்கோலத்தையும் குறிப்பிடுகின்றாள். அதேபரங்கருணைத் தடங்கடலாகிய பரம்பொருள் எளிய அன்பர்களாகிய நம்மை ஆட்கொண்டு குறைகளை நீக்கி நிறைகளை அருளும் அந்த அருட் சீலத்தையும் புகழ்ந்து பாடுகிறாள். இடையில் சிவனே! சிவனே!! என்று ஓலமிட்டுக்கொள்கின்றாள்.

இப்படி இவள் ஓலமிட்டும் அவளின் உள்ளக் குறிப்பை உணராது இருக்கின்றாளாம் வஞ்சகி என்று தோழியைக் கூப்பிட்டவள். "இதனை உணராத நீ உள்ளே இருக்கும் தோழியின் தன்மையை எங்கே உணரப்போகின்றாய். உணரவும் மாட்டாய்' என்கிறாள் அந்தக் கவின்மிகு கன்னி.

### நீராடப்போகும் வழியில் மான்விழியாள் ஒருத்தியுடன் உரையாடுவது

மானேநீ நென்னலை நாளை வந்துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்தெம்மைத் தலையளித்தாட்
கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன்
வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோர்
எம்பாவாய்

**பொருள்:**

முதல் ஐந்து பாடல்களில் தோழியர்களைத் துயில் எழுப்பியதையும் கதவைத் திறக்கும்படி வற்புறுத்தியதையும் அறிந்தோம். இந்த ஆறும் பாடல்முதல் ஒன்பதாம் பாடல்வரை எல்லோரும் சேர்ந்து கூட்டமாய் வீதியில் செல்வதையும் அப்போது நிகழும் உரையாடல்களையும் பார்ப்போம்].

கன்னிப்பெண்கள் கூடிப் பேசிவிட்டுப் பிரிந்து போகும்போது ஒருத்தி மற்றவர்களை நோக்கி, 'நாளை வந்து உங்களை நானே எழுப்புவன்' என்று சொல்லிவிட்டுப் போனாள். ஆனால் அவள் சொன்னபடி செய்யவில்லை. அவளைத்தான் 'மானே!' என்று அழைக்கின்றாள் ஒரு தோழி. அவள் மான்போன்ற விழிபடைத்தவள். அத்துடன் எந்நேரமும் மான் போலத் துள்ளித் திரிபவள்.

'அப்படி ஒருத்தி கூறிச் சென்றாளே. அவள் போனதிசை எங்களுக்குத் தெரியவில்லை, அந்தத் திசையை நீ தயவுடன் சொல்லவேண்டும். நாங்கள் தேடிப்போக' என்று தோழி மான்விழியாளைப் படர்க்கையிலும் முன்னிலையிலும் வைத்துப் பேசுகின்றாள்.

'அந்த உன்வார்த்தை எந்தத் திசையில் காற்றோடு போயிற்று?' என்பது குறிப்பு. மேலும் 'இன்னுமா பொழுது விடியவில்லை?' என்று கேட்கிறாள். வானும் நிலவும் பிறவும் அறியவொண்ணாத இறைவன் நம்பொருட்டுத் தானே வந்து வலிய அருள்புரிந்து நம்மை ஆட்கொண்டிருக்கிறானே! அந்த அருள்புரியும் திருவடியை 'வான் வார் கழல்' என்கிறாள். அந்தத் திருவடிகளைப் பாடிக்கொண்டு வந்தோமே; அப்படியிருந்தும் நீ உன் பொன்னான வாயைத் திறக்கவில்லையே! என்கின்றாள்.

அத்துடன் 'பக்தி மேலீட்டினால் உன் உள்ளமும் உடம்பும் உருகவில்லையே. அவன் உனக்குத் தலைவன் அல்லன் என்று வைத்துக்கொண்டாலும் எங்களுக்கும் எங்களைப்போன்றவர்களுக்கும் தலைவனாக இருப்பவனை எங்களோடு சேர்ந்து நீயும்பாடு' என்று கூடி முடிக்கின்றாள். இவளை விலத்திப் பேசுவதுபோல் பேசி முழு அன்பையும் நம்பிக்கையையும் வெளியிடுகிறாள் தோழி.

## ஆண்டு நிறைவு விழா இன்று

யாழ்ப்பாணம், டிச. 20

சங்கானை மேற்கு ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையத்தின் முதலாவது ஆண்டு நிறைவுப் பொதுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பண்ணாகம் மாதர் அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறுகிறது.

திரு. பொ. சிவபாலன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் சங்கானை சுகாதாரப் பரிசோதகர் திரு. எஸ். ஜோன், வைத்திய கலாநிதி செ. வைத்திலிங்கம், சைவப் புலவர் கா. வேல்முருகன், குடும்ப நலசேவையாளர் திருமதி சிவா சற்குணசிங்கம் ஆகியோர் உட்பட மற்றும் பலர் உரையாற்றுவார்கள்.

மேற்கு ஜெர்மனி செல்ல வேண்டுமா!
தங்களது பாஸ்போட்டுடனும் மூன்று புகைப்படங்களுடனும் உடனடியாகத் தொடர்புகொள்ளவும்.
மற்றும் பாஸ்போட், பௌண்ட், விசா, பிரயாணக் காசோலை, பிரயாணச்சீட்டு ஆகியவற்றிற்கும் சிறந்த ஓர் ஸ்தாபனம்

RAJEEVAN TRAVELS
42, Clock Tower Road, JAFFNA.
(Opp. B.M.C.) T'Phone: 23665

# உதயன்

20-12-85

பணிப் பெண்கள் தேவை!
குவைத் வைத்தியசாலையில் பணிப்பெண்களாக (Attendent) சேவை செய்ய பெண்கள் தேவை.
(வயது 18-35) பாஸ்போட்டுடனும் ஒரு புகைப்படத்துடனும் உடனடியாகச் சமுகமளிக்கவும்.
விபரங்களுக்கு:
RAJEEVAN TRAVELS
42, Clock Tower Road, JAFFNA.
(Opp. B.M.C.) T'Phone: 23665

## வித்தாரம்

என்ன முரளி! எங்காலை வாருய்?

ஆமிக்காரர் வந்தவையோ எண்டு பார்த்திட்டு வாறியோ? என்னடா அப்பா உனக்கு விசரே. நாடு நடக்கிற நடப்பிலை ஏதோ தியேட்டருக்குப் போய் படம் பார்த்துவிட்டு வாற மாதிரி வலு சுகமாச் சொல்லிப்போட்டாய்.

கிளிநொச்சி, ஆனையிறவு, பளை, நாவற்குழி, யாழ்ப்பாணம்,வலந்தலை, பொன்னாலை, சேந்தான்குளம் எண்டு அவை அடுக்கடுக்கா இப்ப திக்விஜயம் செய்யினம். கொஞ்ச நாளாய் உள்ளுக்குள்ளை இருந்தவை எல்லோ. இப்ப வெளிக்கிடலாம் எண்டு 'பச்சை' விளக்குக் காட்டப்பட்டதும் பின்னை என்ன செய்வினம்! அவையும்உலாத்த விரும்புவினம் தானே.

அண்டைக்கு — அது தான் போன திங்கட்கிழமை, அவையின்ரை கன, கவச பராதிகள் எல்லாம் வவுனியாவிலை இருந்துஊர்வலம்வந்ததுகள்.

உனக்கு அது ஞாபகம் இருக்குமெண்டு நினைக்கிறன். அதுகளோடை அவையும் நடைபவனி வந்தவை. அவையின்ர நடை பவனிக்கு முன்னாலை தமிழ் பிரயாணிகளின் பஸ்கள்தான் ''பைலட்''டுகளாக வந்ததுகள்.

அதிலை இரண்டு பஸ்களிலை வந்தவை கொழும்பிலை இருந்து புறப்பட்ட சனம்.

திங்கட்கிழமை காலமை ஏழு மணிக்கு கொழும்பிலை வெளிக்கிட்ட ''இன்டர்சிட்டி'' ரயிலிலை வந்தவையைத் தான் சொல்லுறன்.

அதுகள் பெரிய பாவங்கள். மத்தியானம் 11-30 மணிக்கு அனுராதபுரம் வந்திட்டினமாம். அங்கையிருந்துயாழ்ப்பாணம் வாறதுக்கோ அல்லது வவுனியா வாறதுக்கோ பஸ் ஒண்டும் இல்லை. ரயிலை அனுராதபுரம் வரை ஓட விடுற மந்திரியாருக்கு அங்கை இருந்து ஒரு ''கொனக்டிங்'' பஸ் யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப முடியயில்லை. பிரயாணிகளைப் பற்றி அவ்வளவு அக்கறை அவருக்கு.

அது தான் வாசியெண்டு மினிபஸ்காரர் அனுராதபுரத்திலை இருந்து வவுனியா வாறதுக்கு 700 ரூபா கேட்டினமாம். அந்த மினிபஸ்ஸிலை ஆகக் கூடியது 20 பேரையாவது ஏத்த முடியுமோ எண்டது பெரிய அம்மிச்சமாம்.

தமிழ்ச் சனம் என்ன காசுகளை மடியிலை கட்டிக் கொண்டு போகக் கூடிய காலமே இது!

ஒரு மாதிரி எப்பிடியோ ஒரு சிற்றீபி பஸ்ஸிலை ஏறிச் சனம் வவுனியா வந்து சேர்ந்திட்டுது.

பிறகு யாழ்ப்பாணம் வர எண்டு பஸ்ஸிலை ஏறின அந்த பஸ்ஸும் எங்கடை இராமண்ணமாருக்கு முன்னாலை ''பைலட்'' வரவேண்டிய நிர்ப்பந்தமாய்ப் போச்சு.

மத்தியானச் சாப்பாடு இல்லாமல் குடலைக் கையிலை பிடிச்சது மட்டுமில்லாமல், உயிரையும் கைகளிலை பிடிச்சுக் கொண்டு இரவு ஆறரை மணிக்குப் பிறகு தான் அவை யாழ்ப்பாணம் வர முடிஞ்சுது.

அதுக்குப் பிறகு என்னெண்டு ஊருக்குப் போறது. பட்டினத்திலை சொந்தக்காரர் வீடுகளிலை தங்கியிட்டு அடுத்த நாள் காலையிலை தான் வீட்டை போச்சினமாம்.

எப்படி இருக்கு? கொழும்பிலை இருந்து வீடு வந்து சேர்றதுக்கு 24 மணித்தியாலப் பயணம். அதுக்குள்ளத்தனை மாச்சல், கஷ்டம்! சோதினை வேதினை, பசி, பட்டினி.

— தொண்டைமாறு

# வடக்கில் பெரும் தாக்குதலுக்கு இலங்கை தயாராகிறது

## நான்கு இயக்கத் தலைவர்களும் எம். ஜி. ஆரை சந்தித்து முறையீடு

சென்னை, டிச. 20

இலங்கையின் வட பகுதியில் பெரும் அளவு இராணுவத் தாக்குதல் நடத்துவதற்கு ஸ்ரீலங்கா அரசு திட்டமிட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனைச் சந்தித்த நான்கு விடுதலை இயக்கங்களின் தலைவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

வே. பிரபாகரன் (எல். ரி. ரி. ஈ.) பத்மநாபா, (ஈ. பி. ஆர். எல்.) ஸ்ரீ சபாரத்தினம், (ரெலோ) பாலகுமார் (ஈரோஸ்) ஆகியோரே எம். ஜி. ஆரைச் சந்தித்த நான்கு தலைவர்களும் ஆவர்.

இச்சந்திப்பின் போது தமிழ்நாடு மின்சக்தி அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரனும் கூட இருந்தார்.

வட இலங்கையில் முழு அளவிலான தாக்குதல் ஒன்றுக்கு ஸ்ரீலங்கா அரசு திட்டமிட்டு வருவதாகவும், பெரும் அளவு ஆயுதங்களும் துருப்புக்களும் வடக்கில் குவிக்கப்பட்டிருப்பதாகவும் இந்த நான்கு தலைவர்களும் எம். ஜி. ஆரிடம் தெரிவித்தனர்.

ஸ்ரீலங்கா ஆயுதப்படையினர் யுத்த நிறுத்த மீறல்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்கள் என்றும், போராளிகளின் முகாம்களை தேடி அழிக்கும் நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டும் என்றும் இவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

## ஊர்காவல் படையினர் மானபங்கம் செய்தனராம்

### திருமலை பிரஜைகள் குழுவிடம் இரு தமிழ்ப் பெண்கள் முறையீடு

திருகோணமலை, டிச.20

திருகோணமலையில் பெரியகுளம் என்னும் இடத்தில் வியாழக்கிழமை பகல் இரண்டு தமிழ்ப் பெண்கள் ஊர்காவல் படையினரரால் மானபங்கப்படுத்தப்பட்டனர் என்று கூறப்படுகிறது. இதுபற்றி திருமலை பிரஜைகள் குழுவுக்கு முறையிடப்பட்டுள்ளது.

இரண்டு தமிழ்ப் பெண்களும் திருமணமானவர்கள்.

அழுதவண்ணம் பிரஜைகள் குழுவின் அலுவலகம் வந்து தங்களுக்கு நேர்ந்த அவலம் குறித்து அவர்கள் முறையிட்டனர்.

பிரஜைகள் குழு ஊடாக இப்பெண்கள் திருமலைப் பொலீஸில் முறையிட்டனர்.

மானபங்கம் செய்தவர்களை தங்களால் அடையாளம் காட்ட முடியும் என்றும் அப்பெண்கள் கூறினர்.

## பொருள் வாங்க வருவோருக்கு தொல்லையாம்

திருகோணமலை, டிச. 20

மூதூர் நகருக்கு வந்து பொருள்கள் வாங்க விடாது ஊர்காவல் படையினர் தொல்லை கொடுப்பதாக அங்குள்ள தமிழ் மக்கள் திருமலை பிரஜைகள் குழுவுக்குத் தந்தி மூலம் அறிவித்துள்ளனர்.

கட்டைப்பறிச்சான் சேனையூர், சம்பூர் மற்றும் தமிழ்க் கிராமங்களில் உள்ள தமிழர்களே இப்படிக் கஷ்டப்படுவதாகத் தந்தியில் கூறப்பட்டுள்ளது.

## எம்.ஜி.ஆர்....

(1ஆம் பக்க தொடர்ச்சி)

சர் தொண்டமான் சந்தித்து பேசியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

மலையகத் தமிழருக்குப் இலங்கைப் பிரஜா உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதில் அமைச்சர் தொண்டமான் கடுமையாக இருந்து வருவது தெரிந்ததே.

இந்தச் சூழ்நிலையில் அமைச்சர் தொண்டமானின் தமிழக விஜயம் முக்கியம் வாய்ந்ததாக இருக்கும் என்று கூறப்படுகின்றது.

## அப்பா, அம்மா....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கியின் குழாயை கழுத்தில் பதித்த வண்ணம் இவர் சொல்லிக் கொண்டிருந்தார்.

அச்சமயம் தற்செயலாக துப்பாக்கியின் விசையை இவர் தட்டிவிட்டார். அப்பா, அம்மா முன்பாகவே துப்பாக்கியில் இருந்து வெளிவந்த குண்டு அவரின் கழுத்து ஊடாகச் சென்றது. அந்த இடத்திலேயே இவரின் உயிர் பிரிந்தது.

இவரின் மரணவிசாரணையில் தாய் புஞ்சிமெனிக்கா, சக ஊர்காவல் படை வீரர் கே. பி. தர்மதாஸ சாட்சியமளித்தனர்.

**2 ஆம் சம்பவம்**

43 வயதான பி. பி. ரணசிங்காவும் ஒரு ஊர்காவல்படைவீரர் கடமை முடிந்து குண்டு போடப்பட்ட நிலையில் துப்பாக்கியுடன் வீட்டுக்கு வந்தார்.

துப்பாக்கியை வீட்டு மூலையில் வைத்து விட்டு முகம் கழுவ கிணற்றடிக்குச் சென்றார்.

அச்சமயம் வீட்டினுள் அவரின் 16 வயது மகன் கபிலவும் 6 வயது மகள் குசுமலதாவும் இருந்தனர்.

கபில துப்பாக்கியை எடுத்து நேரே நீட்டிய படி வந்தான். விசையில் கையை வைத்து தெரியாத்தனமாக இழுத்து விட்டான். அந்த நேரம் பார்த்து 6 வயது குசுமலதா குறுக்கே பாய்ந்து விட்டாள்.

குண்டு குசுமலதாவின் நெஞ்சைத் துளைத்துக் கொண்டு சென்றது. அந்த இடத்திலேயே அவள் இறந்துவிட்டாள்.

மரண விசாரணைகளை நடத்திய முதலிக்குளம் திமர் மரணவிசாரணை அதிகாரி திரு. யு. பி. குணசேகரா, விபத்து மரணங்கள் என்று தீர்ப்பளித்தார்.

## யாழ் தபால் நிலைய ஊழியர்கள்

## இரவு நேரத்தில் கடமை ஆற்ற பாதுகாப்பு கோருகிறார்கள்

நல்லூர், டிச. 20

யாழ் பிரதம தபால் நிலைய ஊழியர்கள் இரவு நேரங்களில் கடமை ஆற்ற பாதுகாப்பு கோருகிறார்கள்.

ஜனாதிபதிக்கும், அமைச்சருக்கும் இது தொடர்பான தந்தியும், கடிதமும் அனுப்பப்பட்டுள்ளன.

யாழ் அஞ்சல் ஊழியர்கள் முக்கியமாக இரவு நேரங்களில் கடமையாற்ற நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

மாலையில் கடமைக்குச் செல்லும் ஊழியர்கள் அடுத்தநாள் அதிகாலை வரை கடமை புரிவது தற்போதைய நாட்டு சூழ்நிலையில் அவர்களது உயிருக்கு ஆபத்தானது.

இதுபற்றி கடந்த சில மாதங்களாக யாழ் - பிரதம அஞ்சல் அதிபர் திரு எஸ்.பி. ஞானப்பிரகாசத்துக்கு முறையிடு செய்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதனால் தபால், தந்தி அமைச்சருக்கும், தபால் மா அதிபருக்கும் மேன் முறையீடு செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அண்மையில் வவுனியாவில் அஞ்சல் அலுவலகத்தில் ஏற்பட்ட அசம்பாவிதம் தொடர்பாக அங்கு இரவு நேர வேலைகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

அஞ்சல் அலுவல் ஊழியர்களுக்கு வவுனியா பிரதம அஞ்சல் அதிபர் பாதுகாப்பு வழங்கியுள்ளார்.

அதேபோன்று யாழ் அஞ்சல் அலுவலக ஊழியர்களுக்கும் உடன் பாதுகாப்பு வழங்கவேண்டும்.

இவ்வாறு இலங்கை அஞ்சல் தொலைத் தொடர்பு உத்தியோகத்தர் சங்க பொதுச் செயலாளர் திரு. வி.எஸ். தங்கவடிவேல் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## ஆறு பேரைக் கொன்ற ஆயுள்வேத 'அரிஷ்டம்'

சென்னை, டிச. 19

6 பேரின் உயிரைப் பலி எடுத்த ஆயுள்வேத 'அரிஷ்டம்' விற்ற வர்த்தகரை சென்னை மேல் நீதிமன்றம் விடுதலை செய்தது.

அந்த 'அரிஷ்ட'த்தைத் தாயாரித்தவர் மனித உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தக் கூடிய அமிலத்தைக் கலந்தார் என்பது விற்றவருக்கு எப்படித் தெரியும்—

இந்தக் காரணத்தை முன்வைத்து மேல் நீதிமன்ற நீதியரசர்கள் எஸ். நடராஜன், டி. என். சிங்காரவேலு ஆகியோர், கடைநல்லூரைச் சேர்ந்த விற்பனையாளரான சுப்பையா செட்டியாரை விடுதலை செய்யும்படி உத்தரவிட்டனர்.

தென்காசியைச் சேர்ந்த ஓர் உற்பத்தியாளர் கொண்டு வந்து கொடுத்த 'அரிஷ்டத்'தையே சுப்பையா செட்டியார் விற்றார்.

அதை வாங்கிக் குடித்தவர்கள் ஆறுபேர்கள் மரணமானர்கள்.இராசாயன பரிசோதனையின் போது, அந்த அரிஷ்டத்தில் குளோரோ ஹைட்ரேட் என்ற நச்சு அமிலம் கலந்து இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

நஞ்சு கலந்த அரிஷ்டத்தைத் தான் சுப்பையா செட்டியார் விற்றார் என்பதற்கு ஆதாரம் இல்லை என்றும் நீதியரசர்கள் காரணம் காட்டினர்.

### ரூபவாஹினி

மாலை 20-12-85:

5-00 — செய்திகள்
5-05 — ஸ்கூபிடு-கார்ட்டூன்
5-30 — 'திம் வலலு' — விஞ்ஞானம்
6-00 — அப்பலோ 15
6.30 — செய்திகள் தமிழ்
6-55 — விவரணம்
7-25 — சாரங்கி- நாட்டுப்பாடல், கலை நிகழ்ச்சி
8-00 — செய்திகள் சிங்களம்
8-30 — இசை
9-00 — செய்திகள் ஆங்கிலம்
9-20 — இசை
9-25 — டயறி- நடப்பு விவகாரம்
9-45 — ஜனாதிபதி 85 திரைப்பட விருதுகள்
11-15 — ஒளிபரப்பு முடிவு.

## முச்சக்கர வண்டியில் வந்தவர் ஏழரைக் கோடி கொள்ளை அடித்தார்

கொபன்ஹேகன், டிச.19

வலது குறைந்தவர் என்ற போர்வையில் முச்சக்கரவண்டியில் வந்த ஒருவர், ஏழரைக்கோடி டாலர் பணத்தைக் கொள்ளை அடித்துக் கொண்டு மறைந்த சம்பவம் ஸ்கான்டிநேவிய நாட்டில் இடம்பெற்றது.

தபால் நிலையம் ஒன்றுக்கு முச்சக்கர வண்டியில் வந்த இந்த நபர், உள்ளே போனதும் எழும்பி பணப்பெட்டியைக் கொண்டு வந்த பாதுகாப்பு ஊழியரைக் கீழே தள்ளினார். பின்பு பணப்பெட்டியைத் தூக்கிக் கொண்டு ஓடி விட்டார். பின்னர்தான் தெரிந்தது, முச்சக்கர வண்டியில் வந்தவர், வலது குறைந்தவர் அல்லர் என்பது.

# விளையாட்டரங்கு

### கணேசலிங்கம் ஞாபகார்த்த

## உதைபந்தாட்டப் போட்டி இன்று அராலியில் ஆரம்பம்

வட்டுக்கோட்டை, டிச 20

அமரர் இ. கணேசலிங்கம் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் ஏழுபேர் கொண்ட அணிகளுக்கிடையிலான 'நொக் அவுட்' உதைபந்தாட்டப் போட்டி நாளை ஆரம்பமாகின்றது.

அராலி வடக்கு சில்வர் ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் இந்தப் போட்டிகளை நடத்தும்.

கழக மைதானத்தில் நடைபெறும் போட்டிகளில் யாழ் மாவட்டத்திலுள்ள 23 பிரபல விளையாட்டுக் கழகங்கள் பங்கு பற்றுகின்றன.

முதற்சுற்று ஆட்டங்கள் எதிர்வரும் 21, 22, 23, 26, 27, 28ஆம் திகதிகளில் தினமும் பிற்பகல் 2 மணி தொடக்கம் நடைபெறும்.

அரையிறுதி ஆட்டங்கள் 29திகதி (ஞாயிற்றுக்கிழமை) அன்றும் இறுதியாட்டம் ஜனவரி 5ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) அன்றும் நடைபெறும்.

இந்தப் போட்டிக்கான ஒழுங்குகளை கழகச் செயலாளர் திரு. நா. நடனசண்முகதாசன் கவனித்து வருகின்றார்.

## 26 ஆம் திகதி 2-வது டெஸ்ட்

ஆஸ்திரேலியா— இந்திய அணிகளுக்கிடையிலான இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (26 ஆம்திகதி) ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் ஆரம்பமாகிறது.

முதலாவது டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது தெரிந்ததே.

## சுவிஸ் தமிழர்கள்...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

சிகைக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தன அளித்த பேட்டியின் போட்டோஸ்டட் பிரதியை தூதுக்குழு, சுவிஸ் உறுப்பினர்களிடம் கொடுத்த போது, அந்தச் சஞ்சிகையை தாங்கள் ஏற்கனவே வாசித்துவிட்டதாக, சுவிஸ் குழுவினர் சொன்னார்கள்.

யாழ். தூதுக்குழுவினர் சுவிஸ் அதிகாரிகளிடம் மேலும் சொன்னதாவது:-

தமிழர்களுக்கு தென் இலங்கையில் பாதுகாப்பு இல்லை. சிறைக்குள்ளேயே பாதுகாப்பு இல்லாத நிலையில்தான் உள்ளார்கள்.

1983 வெலிக்கடைச் சிறையில் தமிழ் இளைஞர் கொல்லப்பட்டது தெரிந்ததே.

எல்லாவற்றுக்கும் மேலாக ஜனாதிபதி ஜெயவர்த்தன தமிழ் மக்களைப் பற்றி எனக்குக் கவலை இல்லை என்று கூறியிருக்கின்றார்.

காரைநகரில் அண்மை நடந்த வன்செயல்களில் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டார்கள்.

அப்பாவித் தமிழரைச் சுட்டுக் கொன்றுவிட்டு போராளிகளைச் சுட்டுவிட்டோம் என்று அரசு தரப்பினர் கூறுவது சர்வசாதாரணமாகிவிட்டது. படையினரால் கொல்லப்படுபவர்களில் 90 சதவிகித்துக்கு மேலானோர் அப்பாவித்தமிழரே என்றனர்.

பாதிக்கப்பட்டவர்களின் சத்தியக் கடதாசிகளையும் தங்கள் வாதங்களுக்கு ஆதாரமாக யாழ். தூதுக் குழுவினர் சுவிஸ் குழுவிடம் சமர்ப்பித்தனர்.

சுவிஸ் அரசாங்க அதிகாரிகள் தூதுக் குழுவில் அந்த நாட்டு நீதி அமைச்சைச் சேர்ந்த திரு.சுக்ஸ்வெர்ட் மார்சல், திரு. வெரென்பல் சாமுவல், திரு. காவ்மன் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

டாக்டர் ஜெகா பசுபதி,வண.பிதா மைக்கல் சாமி, திரு. ஆர். ஜே. குணரத்தினம், பேராசிரியர் ராமதாஸ், திரு. எஸ். மோஹனதாஸ், திரு. எஸ். பி. அருமைநாயகம், திரு. கே. விஸ்வலிங்கம், டாக்டர். எஸ். நச்சினார்க்கினியன், திரு. எஸ். முருகமூர்த்தி, சட்டத்தரணி திரு. சேவியர், திருமதி. பாலசிங்கம், திருமதி. ராஜரட்ணம், சட்டத்தரணி திரு. ஆர். பாலசுப்பிரமணியம் ஆகியோர் யாழ்.குழுவில் அங்கம் வகித்தனர்.

## ஓடிய இளைஞர் துப்பாக்கி சூட்டுக்கு பலி

மட்டக்களப்பு, டிச.20

மட்டக்களப்பு-கல்முனை வீதியில் நாவற்குடாவில் துப்பாக்கிச் சூடுபட்டு ஓர் இளைஞர் மரணமானர்.

அவரின் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் ஆயுதப் படையினரால்ஒப்படைக்கப்பட்டது.

ஆயுதப் படையினர் தேடுதல் நடத்திய சமயம் பிரஸ்தாப இளைஞர் ஓடினாராம். அதைத் தொடர்ந்தே படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று கூறப்படுகிறது.

## பரீட்சை இன்று ஆரம்பம்

வட்டுக்கோட்டை, டிச20

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கபண்டித, பாலபண்டித, பிரவேச பண்டிதர் பரீட்சைகள் அனைத்தும் இன்று 20-ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும்.

## மாற்றுத் திட்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது என்றும் அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகின்றது.

கூட்டணியின் மாற்று யோசனைகள் நியாயமானவை என்று இந்திய அரசாங்கம் மறைமுகமாக ஆதரவளித்துள்ளதால் —

இலங்கை, கூட்டணியின் மாற்று யோசனை குறித்து தனது கருத்தை நேரடியாக இந்தியாவுக்குத் தெரிவிக்காது தவிர்க்கவே விரும்புவதாகவும் அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றார்கள்.

கூட்டணியினரைக் கொழும்புக்கு அழைத்து பேச்சுக்களை நடத்தினால் இந்தியாவின் மத்தியஸ்த பங்கைத் துண்டித்துவிடலாம் என்று இலங்கை நம்புகிறது.

கூட்டணியினரின் மாற்றுயோசனைகளை இந்தியா நியாயமானது என்று கருதுவது, இலங்கைக்கு பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளதாம்.

மாற்று யோசனைகளுக்கு பதிலளிக்காது இலங்கை இழுத்தடிக்கவே கூட்டணியினரை கொழும்புக்கு வரும்படி இலங்கை கோரியிருப்பதாக இந்திய அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

ஆனால் கூட்டணியினர் இந்தியாவின் உதவியுடன் பேச்சுக்களை நடத்துவதையே விரும்புகின்றனர். அப்படியான நடைமுறையில் ஒரு சமரசத்தீர்வு வந்தால்தான் போராளிகளின் ஆதரவையும் அதற்குப் பெற முடியும் என்பதும் ஒரு கருத்து.

* மேற்கு ஜெர்மனி
* பிரான்ஸ்
* இத்தாலி
ஆகிய நாடுகளுக்கு உங்களை எமது பிரதிநிதி
DECEMBER 26ஆம் திகதி
இங்கிருந்து அழைத்துச் செல்வார்.
மற்றும்
பாஸ்போர்ட், பௌண்ட், விசா
என்பவற்றுக்குத் தொடர்புகொள்ளவும்.
லிப்ருஸ் லிமிட்.,
R. G.கட்டடம், 70,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
60, Sea Beach Road PETTAH, T'Phone: 29148

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: [illegible] உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் அச்சகம் 15, 2-ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் வெளியீடு: திகதி 20-12-1985